# ஆத்மஜோதி



அமரர்

திரு. க. இராமச்சந்திரா அவர்கள்

வைகாசி—ஆனி 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்மஜோதி



ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்

ஜோதி 28— நள ௵ வைகாசி—ஆனி ௴ (14-6-76) ௳ — சுடர் 7-8

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இன்பமுள்ள தோழன் | ... | 113 |
| பெரியோர்களைத் தோத்தரித்த வண்ணம் | ... | 114 |
| இலங்கையில் ஓர் இல்லற ஞானி | ... | 115 |
| காலத்தை வென்று வாழும் — சந்திரன் | ... | 120 |
| இராமச்சந்திரனார் எழுதியுள்ள நூல்கள் | ... | 121 |
| அத்துவித நிலைகலந்த அனுபூதிச் செல்வர் | ... | 122 |
| மகான்களைத் தேடிய மகான் | ... | 124 |
| ''தேசினால் எத்திசையும் விளக்கினார்'' | ... | 126 |
| சிவப்பூத்த இராமச்சந்திரா... | ... | 128 |
| எங்கள் ஐயா | ... | 129 |
| சமரசஞான கலைக்கோவில் அமைப்போம் | ... | 132 |
| நயினை நாகபூஷணி ஈன்றெடுத்த தவப்புதல்வர் | ... | 134 |
| நாம் செய்யும் சிறந்த அஞ்சலி | ... | 137 |
| நிறைவாழ்வு பெற்றவர் | ... | 138 |
| அன்பர்கள் இரங்கல் செய்திகள் | ... | 139 |
| பயன் கருதாத கர்மயோகி | ... | 141 |
| மரணத்தின் மாண்பு | ... | 143 |
| தலங்கமை ஞானி | ... | 145 |
| வள்ளலை மறக்கவும் படுமோ? | | கவர் 3-ம் பக்கம் |


### ஆத்மஜோதி சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுள்சந்தா | 100—00 |
| வருடச்சந்தா | 6—00 |
| தனிப்பிரதி | 1—00 |

ஆசிரியர்: திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி. [போன்: 353]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமுள்ள தோழன்

இச்சை கொண்ட நன்மைகளை
இயற்றி முடித்திடவே
பச்சைக் கொடிகாட்டி முன்னே
பாய்ந்து பணி செய்வான்
அச்சமற்ற சிங்கமவன்
அன்பினிலே அன்னை
எச்சமயத் தொண்டருக்கும்
இன்பமுள்ள தோழன்.

—மகரிஷி சுத்தானந்தர்

தனித்தனியே மதப்பெரியோர் தத்தமது
கொள்கைகளைச் சாற்றுதற்கே
தனித்தனியே சஞ்சிகைகள் நூலகங்கள்
சமைத்திடும் இத்தமிழகத்தில்
அனைத்துலக மதக்கொள்கை அருட்பெரியார்
அனைவரின் வாக்கமுதம் ஏந்தி
இனித்த சமரசம் வளர்க்கும் எழில்ஆத்ம
ஜோதிதனை ஈந்த வள்ளல்.

—பரமஹம்சதாசனார்

என்னரும் உயிரும் வாழ்வும்
இச்சகத் துள்ள மட்டும்
உன்னத மான சைவ
உயர்நெறிப் பணிக்கே என்று
தன்னரும் வாழ்வை ஈந்த
சமரச சீலன் எங்கள்
பொன்மகன் இராமச் சந்திரன்
புகழ்மணம் பொலிந்து வாழ்க!

—பாலபாரதி

மாந்தர் தம்மை நொடிப் பொழுதில்
மயக்கும் மோகக் கவர்ச்சிபல
சூழ்ந்த கொழும்பு மாநகரில்
துள்ளும் இளைஞர் பலர் நெஞ்சைக்
காந்தம் போலக் கவர்ந்திழுத்துக்
கடவுளின்பக் கடலாட்டும்
ஏந்தல் நின்னை எண்ணுகையில்
இதயம் மலர்தல் இயல்பன்றோ!

—பரமஹம்சதாசனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோர்களைத் தோத்தரித்த வண்ணம்

—க. இராமச்சந்திரா அவர்கள்

தீரா நோய் தீர்த்தருளும் தீரன் றன்னைத்
திருவிழியாற் றீவினைக டீர்ப்பான் றன்னை
யாராலு மளவிடுதற் கரியான் றன்னை
யாவர்க்கு மணுகுவதற் கெளியான் றன்னைப்
பாராரும் விண்ணாரும் போற்று வானைப்
பக்தர்களும் முக்தர்களும் பரிந்து போற்றுஞ்
சீரானை ஸ்ரீரமண தேவன் றன்னைச்
சிந்தித்துப் பந்தமறுத் துய்வோம் யாமே.

சாந்திக்கோர் தனியுருவா யுதித்தோன் கண்டாய்
சகமுழுதுஞ் சுகமுறவே வாழ்ந்தோன் கண்டாய்
வேந்தரெல்லாம் வணங்கிநின்ற விறலோன் கண்டாய்
வேற்றுமைகள் அணுவுமிலா விமலன் கண்டாய்
மாந்தருளக் கோயிலிலே வதிவோன் கண்டாய்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதித்தோன்கண்டாய்
காந்தியெனுந் திருநாமந் தன்னைத் தாங்கிக்
காசினிக்காய் உயிர்நீத்த கர்த்தன் றானே!

மோனமாங் கைலாயத்தின்
முகட்டி னூற்றெடுத்து வேத
கானத்தோ டிறங்குங் கங்கைக்
கரைதனில் தவத்தமர்ந்தே
தீனரைக் காப்பதற்காய்த்
திவ்ய ஜீவியத்தை நாட்டி
ஞானமுதளிக்குஞ் சுத்த
சிவானந்தர் திருத்தாள் போற்றி!

அன்புருவா யெமை ஆண்ட அருள்ராம
தாசகுரு அடிகள் வாழி
அன்புருவா யமைந்ததிருக் கிருஷ்ணபாய்
அடியிணை எப்போதும் வாழி
அன்புருவாங் குருபதத்தை அகலாது
அடியர்குடி என்றும் வாழி
அன்புடனே ஆனந்தம் அணைந்துமிளிர்
ஆஸ்ரமம் வாழி வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஓர் இல்லறஞானி

(ஆசிரியர்)

இலங்கையிலும் ஓர் இல்லற ஞானியா? அதுவும் இராமச்சந்திராவா? என்று ஒரு சிலருக்குக் கேட்கத் தோன்றலாம்: அத்தகையவர்களுக்குக் கூறக்கூடிய ஒரே ஒரு விடை, பேதமையினால் அடியேன் கூறியிருக்கலாம். அல்லது பெருங்கிழமையினால் கூறியிருக்கலாம்; அல்லது இவை இரண்டுங் கடந்த நிலையிலுங் கூறியிருக்கலாம்.

அறுபது வயதில் உத்தியோகத்தில் இருந்து இளைப் பாறிய ஐயா அவர்கள், மேலும் இருபத்தொரு ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்கள். அறுபது வயது சென்றால் வீட்டுக்கு நாய் வேண்டாம் என்பார்கள். உத்தியோக காலத்தில் அதிகாரம் செய்து வாழ்ந்தவர்கள் ஓய்வு பெற்றவுடன் அமைதியின்றி அலைந்ததையும் தற்கொலை செய்பவர்களையும் அறிவோம். ஐயா அவர்களுடைய வாழ்க்கையே மற்றையோருக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தது.

உத்தியோககாலத்தில்ஒருகையால்உத்தியோகக்கடமைகளை யும்மறுகையால் ஆத்மீக சமூகசேவையையும்செய்தார்கள், இளைப்பாறிய உடனே இரு கைகளையும் சேவைக்கென்றே பயன்படுத்தினார்கள். அதனால் ஈழத்துள் மாத்திரம் அடங்கிக் கிடந்த அவரது சேவை உலகை நோக்கி விரைந் தது. அவரது சேவையைப் பாராட்டி பல பட்டங்களும் பல கவிகளும் வந்து குவிந்தன. அவற்றை ஆணவத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்யும் நெருப்பு என்று விலக் கினார்.

பாம்பின் காலைப் பாம்பு அறியும் என்பார்கள். அது போல ஒரு ஞானியை இன்னொரு ஞானியால்தான் புரிந்து கொள்ள முடியும். இல்லறத்தில் இருந்துகொண்டே ஞானம் பெற்றாலும் துறவறத்தில் இருந்து கொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெற்றாலும் இரண்டும் ஒன்றே. ஞானம் எவ் வழியாக வந்தாலும், ஞானம் ஞானமேதான்.

"மகான்கள், தெய்வீக புருஷர்கள், ஆகியோரின் வாழ்க்கையையும் போதனைகளையும் ஆழ்ந்து சிந்தித்த தன் விளைவாகவும், ஸ்ரீரமண மகரிஷிகள், ஸ்ரீராமதாசர் போன்ற தம்காலத்து மகான்களுடன் நேரடியாகத் தொடர்பு பூண்டதன் விளைவாகவும், அவரது ஆன்மீக நாட்டமும் பக்தியுணர்ச்சியும் மேன்மேலும் பெருகி, அவரது இதயத்தில் ஞானோதயம் ஏற்பட்டது. தாமே ஒரு இல்லற ஞானியாகவும் சாதாரணக் குடும்ப வாழ்க்கை, சமூகப் பணிகள் ஆகிய புறப்போர்வையில் மறைந்திருக்கும் ஒரு மகானாகவும் அவர் திகழலானார். புனிதமான சத்சங்கத்தின் மூலம் தாம்பெற்ற ஆன்மீகச் செல்வங்களைத் தம் உடன் வாழ்வோர் அனைவரோடும் பகிர்ந்து கொள்ளுமாறு இறையருள் அவரைத் தூண்டியது. அவர் வெளிநாடுகளுக்கும் யாத்திரை செய்து, தத்துவஞான யோகச் செல்வங்களை, உலகின் பல்வேறு பாகங்களில் வாழும் சாதகர்களுக்கும் வழங்கியுள்ளார்"

— சுவாமி சிதானந்தா

"நாங்கள் கொழும்பில் இருந்த போது இலங்கை அன்பர்களின் பெருமதிப்புக்குரிய தலைவரான ஸ்ரீ க. இராமச்சந்திரா எங்களுக்காக போட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தைக் கிரமமாகப் பின்பற்றி வந்தோம். ஸ்ரீ இராமச்சந்திரா ஆனந்தாச்சிரமத்திற்கு மூன்று நான்கு முறை வந்திருக்கிறார். அவரை நீண்ட காலமாக எங்களுக்குத் தெரியும். அவர் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாகப் பணி புரிபவர். தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் செய்யவேண்டியவற்றையெல்லாம் ஒழுங்காகக் கட்டுப் பாட்டுடன் செய்யத் தம் உதவியாளர்களை ஊக்குவிப்பவர்; ஒருநாள் ஸ்ரீ இராமச்சந்திரா எங்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு பஜனைக்கும் மாலை உணவுக்கும் ஏற்பாடு செய்திருந்தார். அன்பர்கள் கூடம் முழுவதும் நிறைந்திருந்தனர். அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராமச்சந்திராவின் புதல்விகள் பஜனைப்பாடல்களை இனிமையாகப் பாடினார்கள். அவர்களுக்கு சங்கீதத்தில் விசேஷத்திறமை அருட்கொடையாக அமைந்துள்ளது. மொத்தத்தில் அன்றைய வைபவம் பேரானந்தமயமாகத் திகழ்ந்தது.

ஸ்ரீ இராமச்சந்திராவும் அவரது மனைவியாரும் பிள்ளைகளும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு இதயபூர்வமான அன்புடன் விருந்துபசாரம் செய்தனர். எந்தப் பக்தரின் இல்லத்திலுள்ள அனைவரும்சேர்ந்து இறைவன் நாமங்களைத் தினந்தோறும் பாடியும் மகான்களுக்குச் சேவை செய்தும் வருகின்றனரோ அந்த இல்லம் தெய்வீக அருள்பெற்று விளங்கும். பக்தர்களும் மகான்களும் அதனை உண்மையிலேயே ஒரு வைகுந்தம் என்று சரியாகக் குறிப்பிடுகின்றனர். —சுவாமி இராமதாசர்.

''திரு. இராமச்சந்திரா அவர்கள் வடமொழி நூற் கருத்துக்களை நன்கு உணர்ந்தவர். தமிழ்ச்சமய சாத்திர தோத்திரங்களில் தோய்ந்தவர். உலக ஞானியர் பலருடைய அருள்மொழிகளைப் பயின்றவர். சமயவாதியாக வாழ்வது பயன் அற்றது என்பதை உணர்ந்து சமயவாணராக வாழ முற்பட்டவர். உலகத்து ஞானியருடைய உபதேசங்களில் ஒருமைப்பாட்டைக் காண்கின்றவர். வடமொழி தென் மொழியிடையே பொதுமையைப் பார்க்கிறவர். வேதாந்த சித்தாந்தங்களின் ஒப்புவமையைத் தெரிந்தவர்.'' —கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

''இலங்கை என்றால் ஒரு நெடுந் திருவாளர் என் முன் நிற்பார். அவரே க. இராமச்சந்திரனார். அவரது சொல்லும் அழுத்தம்; செயலும் அழுத்தம். அவர் உள்ளம் உலகுள்ளம். செயல் வீறுபெற்ற செம்மல். சமய உணர்ச்சிக்குப் புதிய எழுச்சி தந்து இலங்கையில் ஒரு தெய்வீக ஒளி பரப்பினவர்.'' —மகரிஷிசுத்தானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணமகரிஷிகள் தம்மிடம் வருவோரை நோக்கிப் பெரியபுராணம் படியுங்கள் என்று சொல்லுவது வழக்கம். பெரியபுராணம், பல்லாயிரக்கணக்கான வருடங்களாகத் தமிழர் போற்றி வந்த பண்பாட்டினின்று மலர்ந்த உண்மை வரலாற்றை யுடையதாகும். அடியார்கள் இறைவனைக்கண்டாரேனும் காணாரேனும் அவர் உண்டோ, இல்லையோ, என்ற ஐயம் அவர்களுக்குக் கனவிலும் நிகழ்ந்ததில்லை. அடியார்கள் இறைவனை ஒருநாளும் மறந்ததில்லை. இறைவனை உணர்ந்தபின் அவர் பாதங்களை அடியார்கள் மனம் விட்டுப்பிரிவதில்லை.

திரு. இராமச்சந்திரனூர் அவர்களுக்கு அப்பருடைய வாழ்க்கை நன்கு பிடித்திருந்தது. அதனால் அப்பருடைய வாழ்க்கையே குறிக்கோளாக அமைய வேண்டும் என்று பெரிதும் விரும்பி இருந்தார்.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற அப்பரின் வாக்கிற்குத் தம்மை இலக்கிய புருஷராக்கிக்கொண்டார். அந்த நினைவு போலும் அப்பரைப் போல எண்பத்தோராவது வயதில் அதுவும் சித்திரை மாதத்தில் சிவபதம் அடையும் வாய்ப்புக்கிட்டியது. ரமண பகவானின் பூரண ஆசியைப் பெற்றதனுல்போலும் ரமண பகவான் சோதியுட் கலந்த அதே திதியிலேயே சிவபதம் அடைந்தார்கள்.

பாயிற்கிடவாமல் பாருக்குப் பாரம் ஆகாமல் சாய்மனை நாற்காலியில் இருந்த வண்ணமே பூத உடலை உதறியது ஆத்மா. ஆத்மா பூத உடலை உதறுவதற்குரிய எவ்வித விகாரமும் அடையாமலே சாய்மனை நாற்காலியில் இருந்ததியான நிலையிலேயே ஆத்மா பூத உடலை விட்டுப் பிரிந்தது.

பலாப்பழம் பழுத்துவிட்டால் பழம் மரத்தைவிட்டுப் பிரிந்து கொள்ளுகிறது. வெள்ளரி பழுத்தால் பழத்தை விட்டுக் கொடிதான் பிரிந்து கொள்ளுகிறது. அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஐயா அவர்கள் இப்பூத உடல் எடுத்த நோக்கம் பூரணமாகிவிட்டது. அதனால் வெள்ளரிப்பழத்தைவிட்டுக் கொடி பிரிந்ததுபோல ஆத்மா உடம்பைவிட்டுப் பிரிந்தது.

அவர்களுடைய வாழ்க்கை இல்லறத்தாருக்கும் துறவிகளுக்கும் முன்மாதிரியானதொரு வாழ்க்கையாகும். இல்லறத்தானாக இருந்து மனைவிக்கும் மக்களுக்கும் சுற்றத்தாருக்கும் ஆற்றவேண்டிய கடமைகளை முறையாக ஆற்றியவர்கள்.

> "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
> இல்வாழ்வான் என்பான் துணை"

என்ற குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர்கள். அதே நேரத்தில் தாமரை இலைத் தண்ணீர் போல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து துறவிகளுக்கு முன்மாதிரியாளராகவும் விளங்கியவர்கள்.

ஜனகமகாராஜா பெரிய சக்கரவர்த்தி. அதே நேரத்தில் பெரிய ஞானியாகவும் விளங்கியவர். மிதிலை பற்றி எரிவதாகக் காட்சி கண்ட போதும் தமது மனோநிலையினின்றும் எள்ளளவும் தளம்பாது நின்றவர், அதே போல ஐயா அவர்களும் வாழ்க்கையில் எவ்வித புயல் வீசிய போதிலும் அவற்றையெல்லாம் இறைவனது பாதங்களுக்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள்.

கருப்பஞ்சாற்றை எடுத்துப் பயன்படுத்திக் கொண்ட பின் கருப்பஞ்சக்கை அக்கினியில் வேகும் போது நான் அருமையாக வளர்த்த கரும்பு வேகின்றதே என்று கவலை கொள்பவர்கள் யாரும் இல்லை. அதே போல ஐயா அவர்கள் தாம் பூத உடலோடு வாழ்ந்த எண்பத்தொரு ஆண்டுகளும் சேவைக்கென்றே அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள். "உடம்பினைப்பெற்ற பயன் ஆவதெல்லாம், உடம்பினுள் உத்தமனைக்காண்" என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள். ஆகவே அவர்களுடைய சாவு 'கலியாணச்சாவு' என்றே கூற வேண்டும்.

இத்தகையவர்கள் எல்லாம் வாழத் தெரியாதவர்கள் என்று கூறுகிற கலியுக காலம் இது. இக்கலியுகத்திலே இப்படித்தான் வாழவேண்டும் என்று கூறி வாழ் வாங்கு வாழ்ந்து காட்டியவர்கள் இராமச்சந்திர ஐயா அவர்கள். அவரது இலட்சியவாழ்வு, எமது வாழ்வையும் முன்னோக்கி நடத்துவதாக என்று வேண்டி அமைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று வாழும்—சந்திரன் சிவாத்தும சோதி மதி என்றும் ஒளிரும்!

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

இப்போதுதான் ஆத்திரேலியாவைச் சுற்றித் திரும்பினேன். அடுத்த மாதம் என்னை இலங்கைக்கு அழைத்திருந்தனர். இலங்கைக்கு வந்த போதெல்லாம் நான் ஆர்வமாகப் பார்க்கும் முதல் அன்பர் கதிரேசு இராமச்சந்திரர். இனி அவரைக் காண முடியாதே—அந்தோ! என் ஆர்வங்களை நிறைவேற்ற அவர் எவ்வளவு தொண்டு செய்தார்! அவர் பச்சைக்கொடி காட்டி என்னை இலங்கை முழுதும் இட்டுச்சென்று சிவமுழக்கம் செய்வித்தார். அவர் ரயில்வே அதிகாரியாயிருந்தபோது, கந்தையா வைத்தியநாதர் அரசாங்கச் செயலாளராயிருந்தபோது இலங்கை முழுதும் சுற்றுலா நடத்திக் கண்டறியாதன கண்டேன். நான் பாடிய அரிய பாடல்களையெல்லாம் அவர் அழகாக அச்சிட்டுப் பரப்பினர்—இன்பத் திருப்புகழ், சமய விளக்கம், கதிர்காமமாலை, இன்பமாலை, நாவலர் பெருமான் இன்னும் எத்தனையோ! அவரே இலங்கையின் 'ஆத்மஜோதி' யாக விளங்கினர். நான் ஆறுமுகநாவலர் வரலாறு எழுத அவரே துணை செய்தவர். உலகில் எத்தனையோ மனிதர் வந்து, இருந்து செல்கின்றனர்; சிலர் வந்து வாழ்ந்து வெல்லுகின்றனர் — காலத்தை வெல்லுகின்றனர். அத்தகைய வெற்றிபெற்ற வீரர் நமது இராமச்சந்திரர். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் சிறந்த எழுத்தாளர். அவரது **Religious Digest** பொன்ஞுத அறிவுச்சுடர். அவர் தொட்டதெல்லாம் பொன்னாக்கினர். இல்லறத்திலும் அவருக்கு மனத்தக்க மாண்பினள் வாய்த்தாள். பண்புடைய மக்கள் வாய்த்தனர். அவர்களுக்கெல்லாம் என் அனுதாபத்துடன் ''ஆத்மஜோதி''யைத் தூண்டி சந்திரன் என்றும் நின்று இலகச்செய்யுங்கள் என்றே வேண்டுகிறேன். திரு. க. இராமச்சந்திரனரின் ஆத்ம சாந்திக்காக இங்கே ஞாயிறு (8-5-76) வேள்வி நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமும் ஆதியும் அற்றநல் ஆன்மா
சந்திர ஞக வந்தது பாரில் —
பூரண சந்திர . ஞகப் பொலிந்தது
ஒவ்வொரு மூச்சையும் செவ்விய பணியிலே
போக்கிப் பொதுநலம் ஆக்கிய சந்திரன்
அறிவுக் கதிர்விரி அன்புச் சந்திரன்
ஆற்றல் மிகுந்த ஊற்றும் சந்திரன்
இலங்கைச் சந்திரன் எழிலே வீசி
மறைந்த தன்றே மாறினி என்னே!
அழுது புலம்பினும் அம்புலி வருமா!
ஆத்தும ஜோதியை அருள்பெறத் தூண்டுக!
பூரணச் சந்திரன் புன்னகை வீசி
என்றும் ஒளியாய் நன்றிங் கிலகுவான்
என்றும் இருப்பதனில் என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பெனலாமே
இறக்கும் உடலில் இறவாச் சந்திரன்
விளங்கினன் என்றும் விளங்குவான் காணீர்
பண்புடை மக்களும் நண்பரும் சுற்றமும்
திண்புடைக் கொள்கையும் திறலுடைச் செயலுமாய்
வாழ்வாங்கு வாழ்ந்தவன் மதிமிகு மதியோன்
மண்ணுட லற்றன் மாண்புகழ் உடலுடன்
சிவம்பெற வாழ்வான் வாழ்கிறன் காணீர்!

# இராமச்சந்திரனர் எழுதியுள்ள நூல்கள்

1. செல்வச் சந்நிதிப் பதிகம்
2. ரமண ஸ்தோத்திர மஞ்சரி
3. ரமணத் தியானம்
4. ரமணரின் அவதார மகிமை
5. அன்னே கிருஷ்ணுபாய்
6. முருகன் புகழ் மாலே
7. உதிர்ந்த மலர்கள்
8. பெரியார் தோத்திர மஞ்சரி
9. சமரச ஞானக் கோவை
10. ஸ்ரீ ஆதிசங்கரரின் அவதார மகிமையும் அவர் காட்டிய அருள் நெறியும்
11. கதிர்காமப் பதிகம்
12. பெரியார் அர்ச்சனேமாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவித நிலைகலந்த அனுபூதிச் செல்வர்

—புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

ஆசிரிய விருத்தம்

ஈழமணித் திருநாட்டில் இருபதாம் நூற்றுண்டில்
இந்து மார்க்கம்
வாழவழி வகுத்தமைத்த மகான்கள்வரி சையிலுரிய
இடம் வகித்தோன்
ஆழ்நெடுங் கடல்கடந்தே அனைத்துலக நாடுகளும்
அன்பி ஞென்றுய்ச்
சூழவொரு குலமெனவே சமரசஞா னம்தழைக்கத்
தொண்டு பூண்டோன்

அன்புருவப் பெருந்தகையின் னருள்மலர்ந்து தியானத்தி
லமர்ந்து நாளும்
தன்புருவ மத்தியிலே தன்னாலே தனைக்கண்ட
தீர சாந்தன்
என்புருக உட்காதல் இனிதுகனிந் தில்லாளைத்
தாயாய்க் கண்டோன்
இன்பசத்தி மயமானேன் இல்லறத்தில் ஞானியென
இங்கு வாழ்ந்தோன்

பத்திவளர் பரமகம்ச குருதேவர் ஒருமைகண்ட
பதியும் போதிப்
புத்தர்பிரான் நிருவாணம் புகுபதியும் யேசுபிரான்
புவிக்காய்த் தம்மைத்
தத்தஞ்செய் திருப்பதியும் நபிகள்நா யகம்சாந்தி
தழைக்க வாழ்ந்த
அத்தலமும் தரிசித்தே அனுபவத்தில் ஒருமைகண்ட
அருளின் செல்வன்

தன்னுள்ளே தனைக்கண்டோன் தன்னுயிரிற் சகலவுயிர்
தமையும் கண்டோன்
தன்னுயிரை மன்னுயிரிற் கண்டான்ம தத்துவத்தின்
ஒருமை கண்டோன்
தன்னாலே தனைவருத்தாத் தன்மைகண்டோன் காந்திமகான்
தரிச னத்தால்
தன்னுயுள் வரையகிம்சா தருமநெறி கடைப்பிடித்த
ராமச் சந்த்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடலம் வீழவெளி யேறியுயிர் தாரகமாம்
சிதாகா சத்துள்
அன்னியமி லாதுகலந் திடுநன்னுள் அண்மையினில்
உளதா மென்றே
என்னூற்குத் தான்வகுத்த முன்னுரையி லெழுதியதோ
டெனைப்பா ராட்டத்
தன்னுரிமை மக்களவர் மக்களுள ரெனவுமன்பாற்
சாற்றும் பண்போன்

சைவத்திற் காலூன்றிச் சமயநெறி தலைப்பட்ட
ராமச் சந்த்ரன்
மெய்வைத்த வேதாந்த விசாரத்தால் சமரசஞா
னம்மேற் பட்டே
கைவைத்த நெல்லியெனக் கண்டோன்மெய்ப் பொருள்ககனத்
தமர ருள்ளும்
வையத்து மனிதருள்ளும் இவன்போலோர் மகனையெம்மாற்
காண வற்றே

சத்துவ குணக்கடலில் தான்திளைத்து விளையாடிச்
சமநோக் கத்தால்
வித்தகமெய்ஞ் ஞானவொளி விளக்கேற்றி யுள்ளத்தே
மெய்மை கண்டோன்
சுத்தசம ரசஞானி குணங்கடந்தோன் துவைதநிலை
தன்னில் நின்றே
அத்துவித நிலைகலந்தான் ஆத்துமஜோ திக்கொளிசெய்
தமர்ந்த ஆசான்

நாவலத்தாற் புனிதசனு தனதரும நடையினிது
நவின்று நாட்டிப்
பூவலய மெங்குமொளி வீறுநடை போட்டடங்கும்
புனிதன் தேவ
பாவலனிவ் விஞ்ஞான யுகத்தினிலே பரனனுப்பும்
தூதாய் ஞான
காவலனுய் வருராமச் சந்திரன்தன் கடமையொழிந்
தொடுக்கம் கண்டான்

உடற்பட்டு நீத்திங்கே உயிர்வாழ்ந்த ரமணமகான்
அருளின் ஊற்றும்
கடற்கண்ணே மூழ்கிமகான் கருணைத்தேன் பொழிபாத
கமல முள்ளத்
தடத்தின்கண் மலர்ந்திடத்தன் வாழ்நாளிற் சாந்திகண்ட
ராமச் சந்த்ரன்
கடத்தலரி தாமுலக சஞ்சாரக் கடல்கடந்து
கரைசேர்ந் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகான்களைத் தேடிய மகான்

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

கண்ணுக்கும் காணுகிற தன்மையுண்டு; காணாது. புற ஒளியோடு கலக்கும்போதுதான் கண்ணுக்குக் காட்சி உண்டாம்.

இரவில் விளக்கொளியோடு கலந்து காணுங் காட்சி அற்பமானது. விளக்கொளி கொண்டு சூரியனைத் தரிசிப்பது முடியாது.

விடிந்த பின் சூரிய ஒளியோடு கலந்து காணுங்காட்சி, சூரியனையே காண உதவுகின்றது.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற திருவாசகத்தை ஞாபகப்படுத்துகின்றது.

சூரியன் உதயமானதும் இரவு விளக்குப் பகல் விளக்காய்ச் செயலற்றுச் சும்மாகிடக்கின்றது.

‡ ‡ ‡ ‡

கண்ணுக்குக் காணுகிற தன்மைபோல, ஆன்மாவுக்கு அறிகிறதன்மையுண்டு; அறியாது. அருள் ஒளியோடு கலக்கும் போதுதான் அறிவு உண்டாகும்.

கண்ணுக்குக் காட்சி வருவிக்கும் புற ஒளிகள் போலல்லாது, அருள் ஒளி புறம், உள் என்ற பேதமின்றி ஆன்மாவை ஊடுருவி எங்கும் வியாபகமாயிருப்பினும், ஆன்மா, அறியாமை இருளில் மூழ்கிக் குருடுபட்டுக்கிடத்தலால் அருள் ஒளியோடு கலக்கின்றிலது.

இரங்காமலிருக்கமாட்டாமையைத் தன்னியல்பாயுள்ள அருள் ஒளி, ஆன்மாவுக்கு மாயாயந்திர தநுவாகிய இந்தச் சரீர விளக்கை உபகரிக்கின்றது. அதன் மூலம் தன்னோடு ஆன்மா கலக்க வழி செய்கின்றது. அதனால் ஆன்மாவுக்கு அறிவு உதயமாகின்றது; சிற்றறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீர விளக்கால் அருள் ஒளிம்பிழம்பைக் காணுதல் இயலாது. காண முயலுதல் விளக்கொளி கொண்டு சூரியனைத் தரிசிக்க முயலுதல் போலாம்.

‡ ‡ ‡ ‡

சரீர விளக்குக் கொண்டு, அருள் ஒளிப்பிழம்பைத் தரிசிக்க முடியாதாயினும் சரீர விளக்கில் நூதன விசேடமுண்டு.

சரீர விளக்கு விடியும்வரை உபகரித்ததன் மாத்திரையில் அமையாது, விடிவிக்கும் விளக்குமாம். விடிவித்த சரீர விளக்கின் நூதன விசேட இயல்பு.

சரீர விளக்கை எது உதவியதோ அது விளக்கைப் பயன்படுத்தும் விதியையும் வகுத்திருக்கின்றது.

விதிப்படி சரீர விளக்கைப் பயன்படுத்துபவர்களுக்கு, அறியாமை இருள் விடிய, அருள் ஒளிப்பிழம்பாகிய சிவ ஞான சூரியன் உதயமாம். அப்போது, சரீர விளக்குச் செயலற்றுப் பகல்விளக்காய்விடும். கண்ணொளி சூரிய ஒளியோடு கலப்பது போல, ஆன்மா அருள் ஒளியோடு கலந்து, அருள் ஒளிப்பிழம்பாகிய சிவஞான சூரியனைத் தரிசித்துச் சிவமயமாகும்.

‡ ‡ ‡ ‡

மாயா யந்திர தநுவாகிய சரீர விளக்கின் இயல்பை உணர்ந்த மகான்கள் தமக்குக் கிடைத்த சரீர விளக்கைப் பயன்படுத்தும் முறையிற் பயன்படுத்திப் பரம்பொருளை அணுகும் வழியிற் சென்று கொண்டேயிருப்பார்கள்; ''கதிம் பாற் செல்வ ஏது நெறி'' என்பதே அவர்கள் விசாரம்.

மகான்களைத் தேடித்தேடி, அவர்களை அணுகுவதிலேயே, தம் வாணாளைப் பெரிதும் அர்ப்பணஞ் செய்த ஒரு மகான் திரு. க. இராமச்சந்திரா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேசினால் எத்திசையும் விளக்கினார்"

—செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

'மாசிலாதமணி திகழ் மேனி மேல்
பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச வொண்ணாப் பெருமையராயினார்.''

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. இவ்வாக்குக்கு இலக்கியமாக எம்மத்தியில் வாழ்ந்து இறையடி புக்கவர் திரு. க. இராமச்சந்திரா ஐயா அவர்கள். தமிழ் நாட்டுச் சிவகங்கைக்குப் புறப்படும் போது கடிதம் மூலம் ஆசி கூறி அடியேனைப் பாராட்டிய பெருந்தகையார் திரும்பி நான் வந்தபொழுது இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார் என்ற செய்தி திடுக்கிட வைத்தது. அவர்களின் தூல உடம்பை இனிநாம் காண மாட்டோம். என்றாலும் நீண்டுயர்ந்த ஆளுமைத் தோற்றமும், கருணை ததும்பும் விழிகளும், தளதளத்த குரலும், ஆன்றவிந்தடங்கிய புலமையும் சான்றாண்மையும் எம்மனக் கண்ணைவிட்டு என்றுமே அகலமாட்டா. இரண்டொரு தினங்கள் அவர்களுடனிருந்து விருந்துண்ணவும் கலந்துரையாடி அவர்களின் அருள்மொழிகளைக் கேட்கவும் பெருவாய்ப்பு ஏற்பட்டது. பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்த புராணம் என்பவற்றில் அவர்கள் பெற்றிருந்த பயிற்சி சொல்லுந் தரத்ததன்று. பாடல்களைச் சொல்லிக் கொண்டே போவார். நான் வியந்து கேட்டுக்கொண்டே இருந்தேன்.

மூன்று வயதிலிருந்தே ஆரம்பிக்கப்பட்ட தெய்வீக உணர்வு வளர்ந்து வளர்ந்து பிற்காலத்தில் பிரகாசிக்கத் தொடங்கி காலகதியில் அணையா விளக்காக அமைந்து விட்டது. நயினை நாகபூஷணியின் கடாட்சம் இந்தப் புனித பிறவியைத் தெய்வீக நிலைக்கு இட்டுச் சென்றதில் வியப்பொன்றுமில்லை. 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை'' என்ற வாக்கு பெரியார் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மிகப் பொருந்தும். ஸ்ரீ ரமண மகரிஷியின் சீடராக அமையப் பெற்ற பேறு நினைக்க வொண்ணுதது. தவமும் தவமுடையார்க்காகுமன்ரோ'' ஆகவே வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வநிலைக்குள்ளாகி விட்டார் ஐயா அவர்கள்.

கருவாய்க் கிடந்து அவன் கழலே நினையும் கருத்துடனே உருவாய்த் தெரிந்து நாமம் பயின்று திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்து சிவகதி கைவரப் பெற்ற பெரியார் இவர். வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகர் இவர். பக்தியின் பாலராகிப் பரமனுக்காளாம் அன்பர் இவர். அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கு அடியனுக விளங்கியவர் இவர். உலகெங்கணுஞ் சென்று தமது பேச்சுத் திறனுல் சமய வாழ்வு வாழ்ந்து வேற்று நாட்டவர்க்கு வழிகாட்டியவர் இவர்.

இவரது உள்ளமே கோயிலாகிவிட்டது. ஊனுடம்பு ஆலயமாகிவிட்டது. ''ரமண மந்திரம்'' என்ற நாமத்தைக் கொண்ட இவரது இல்லமே ஒரு புனித யாகசாலை. அங்கு காலடி வைக்கவே மயிர்க்கூச் செறியும். காண்பது கடவுட் காட்சி பேசுவது இறை நாமம். ஆற்றுவது புனித கருமம். அத்தனைக்கும் உறுதுணையாக அன்னுரின் ஏதமில் கற்பின் வாழ்க்கை இல்லவள் அமைந்த மாண்பு. இவர் தம் புதல்வரும் புதல்வியரும் தந்தையார் வழிநின்று பணியாற்றும் திறன்; இவையனைத்தும் அடியேன் கண்டு களித்த கவின்பெறு காட்சிகளாகும். பேசிப்பயன் என்?

> ''நெருநலுள ஞெருவன் இன்றில்லையெனும்
> பெருமை யுடைத்திவ் வுலகு.''

எனவே ஐயா அவர்களின் பிரிவை தாங்கிக்கொள்வோம்; அவர் சென்ற வழியைச் சிறிது சிந்திப்போம்; செயலாற்ற முற்படுவோம்; சிந்தையும் செயலும் புனிதமடைய வாழுவோம்; என்று சங்கற்பித்து பெரியார் அவர்களின் பொன்னுர் திருவடிக்கு அஞ்சலி செலுத்தி அமைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவம்பூத்த இராமச்சந்திரா சிவலோகம் திகழ்ந்து வாழி!

—அருட்கவி சீ. விநாசித்தம்பி

வெண்பா

மன்னும் சிவனடிக்கீழ் வாழ் இராமச் சந்திரா
என்னும் புனிதமான ஏந்தலே—நின்னன்பு
கற்பகமாய் விண்ணுதி காணுமண்ட கோடியெல்லாம்
சிற்பரத்தேன் பெய்கிறது சென்று.

சென்று மிருந்தும் சிவனூர் திருச்சிறப்பை
ஒன்று மடியார்க் குரைத்துணர்த்தி- என்றும்
தவயோகம் சார்இராமச் சந்திரா நின்றன்
பவவே ரறுத்தனைமுற் பட்டு.

பட்டுழலும் பாசவினைப் பற்றெழித்துக் கற்றகலைத்
திட்டமுயர் ஞானச் சிரமுணர்ந்து—நிட்டை
வளர்இராமச் சந்திர வள்ளலே வாழ்க
இளமதியோன் பாதத் திருந்து.

இருந்துணரும் மெய்த்தொண்டர் எண்ணிச் சிவப்பால்
அருந்துபல நூல்வரைந்தாய் ஐயா—பொருந்து தமிழ்த்
தாய்தந்த சேய்இராமச் சந்திரரே நின்சைவ
வாய்வேக நொந்தோம் மனம்.

விருத்தம்

அவம்பூத்த வினைகணீங்க அருள்பூத்த நெறிக ளோங்க
பவம்பூத்த பண்புதேங்கப் பயன்பூத்த தருமம் தாங்கத்
தவம்பூத்த ஆத்மஜோதிச் சஞ்சிகைதனை வளர்த்த
சிவம்பூத்த இராமச்சந்த்ரா சிவலோகம் திகழ்ந்து வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஐயா

—திரு. சி. சரவணமுத்து சுவாமிகள்

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கும் யாழ்ப்பாண நாட்டில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்று நயினை தீவு அல்லது நாகதீபம். இங்குதான் சக்தி பீடங்களில் ஒன்று அமைந்துள்ளது. அங்கு எழுந்தருளியிருப்பவள் (நாகமணியும் பரமர்பாகமுறவானதொரு நாகபூஷணி அம்மையார்) இவளுடைய கடாட்சத்தால் அந்த ஊரில் தோன்றியவர்கள் ஞானிகளாயும் வரகவிகளாயும் கல்விமான்களாயும் அமைந்தார்கள். நயினுதீவுசுவாமியார் என அழைக்கப்பட்ட முத்துகுமாரசுவாமிகள் நயினை நாகமணிப் புலவர் போன்ற இன்னும் பல பெரியார்கள் அவதரித்து வாழ வழிகாட்டினார்கள். அந்தப் பரம்பரையில் அவதரித்த மகான்தான் ரமண சரணானந்தன் ஆகும். அவர்கள் எங்கள் மதிப்புக்குரிய இராமச்சந்திரா ஐயா அவர்கள். தம்முடைய பள்ளிப் படிப்பின் காலத்திலேயே மேடைப் பேச்சுப் பேசும் வல்லவராயும், தமிழ்ப் பண்புக்கும் சைவ நெறிக்கும் அரண் செய்பவராயும் திகழ்ந்ததால் அவர் உயர்ந்த உத்தியோகம் மேற்கொண்டு கொழும்பில் வாழ்ந்த காலத்திலும், அந்நிய நாகரீக மோகம் இல்லாது வேட்டி சால்வை உடுத்து உத்தியோகம் பார்த்தார்கள். அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே சத்சங்கம். இந்த சங்கத்தில் சேர்ந்து நன்னெறிப்பட்டோர் பலர். ஐயா அவர்கள் சமய நெறிக்கு மட்டும் வழிகாட்டியாக இருக்காது அளப்பரிய சமூக சேவையும் செய்துள்ளார்கள். அவர்களின் பெருமுயற்சியில் ஒன்று வேலணை—புங்குடுதீவு பாலம் என்பது குறிப்பிடத்தக்கது. ஐயா அவர்களின் பெருமுயற்சியாலும் அவர்களின் ஆன்மீக வலுவாலுமே சுவாமி சிவானந்தா, யோகி சுத்தானந்த பாரதி, குன்றக்குடி அடிகளார் போன்ற சமயப் பெரியார்களும் மகாத்மா காந்தி அடிகள், இராசகோபாலாச்சாரியார் போன்ற மகான்களின் வருகையும் நமக்கு கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா அவர்கள் ஸ்ரீ ரமண மகரிஷியின் சீடராகி அங்கேயே தாமும் வதிய ஓர் குடில் அமைத்துள்ளார் என்பது போற்றுதற்குரியது. ஐயா அவர்கள் இமயம் முதல் கன்னியா குமரி-இராமேஸ்வரம்வரை உள்ள ஸ்தலங்களை தரிசித்ததுமட்டுமல்லாது ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர், சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர், சுவாமி இராமதாசர் ஆகிய மகான்கள் பிறந்த இடம் சமய குரவர்கள் பிறந்த இடம், சந்தானுச்சாரியர்கள் பிறந்த இடம் யாவுக்கும் சென்று தரிசித்த பெருமகான் ஆவார். அதுமட்டுமல்ல தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றபடியும் எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாது வேறொன்று அறியேன் பராபரமே என்ற தாயுமானவர் நெறியை மேல்நாட்டில் பரப்பிய பெருந்தகை யாவர்: சுவாமி விவேகானந்தருக்குப் பிறகு அமெரிக்கா ஜப்பான், இங்கிலாந்து முதலான நாடுகளில் எமது சைவ நெறியையும் சைவப் பெரியார்களையும் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்கள். அதுமட்டுமல்ல இலங்கையிலேயும் இந்துக்களாலும் பவுத்தர்களாலும் கிறீஸ்தவர்களாலும் மகமதியர்களாலும் போற்றப்பட்ட ஓர் சமரச தத்துவ ஞானியாக விளங்கினார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கு—விபுலானந்த அடிகளுக்கு சமரசநெறிகண்ட வள்ளலாருக்குப் பின் தோன்றி, அவர்கள் வழி நின்று நம்மை உய்விக்க வந்தவர் நமது இராமச்சந்திரா ஐயா அவர்களே. தமது எண்பத்தோராண்டு இவ்வுலக வாழ்வை நீத்து தமது குருநாதன் ஸ்ரீ ரமண மகரிஷி அவர்கள் ஜோதியிற் கலந்த அன்று தாமும் சோதியிற் கலந்துகொண்டார்கள்-ரமணமகரிஷி சோதியிற் கலந்ததை கண்ட பெரியார் சோதியிற் கலந்து கொண்டதை பார்க்கும் பேறு பெருத நாம் இருந்தென்ன இறந்தென்ன—ஐயா அவர்கள் நயினை நாகபூஷணி அம்பாள் பேரிலும் கதிர்காமக் கந்தன் பேரிலும், திருக்கேதீஸ்வரத்துக்கும் பாடிய பாடல்கள் பல. அவைகள் புஸ்தக ரூபமாக வந்துள்ளன. ஐயா அவர்கள் 1949ம் ஆண்டு திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதீஸ்வரத்தில் நடத்திய சாதனவாரத்தில் - பித்துக்குளி முருகதாஸ், பாலயோகி, சுகப்பிரமம் முதலான இந்திய பேரறிஞர்களும் இலங்கையில் உள்ள சத்சங்க அன்பர்களும் கலந்து கொண்ட சமயம் ஐயா அவர்கள் தீர்க்க தரிசனமாகப் பாடிய பாடல் ஒன்று இதோ.

விண்ணோரும் விளங்கரிய விமலன்றன்னை
வேற்றிவேல் முருகனை ஈன்றளித்த நெற்றிக் கண்ணனை
கவுரிமகள் கணவன்றன்னை கடல் சூழ்ந்த
கவின் நகராய் விளங்கிப் பின்னர் மண்ணோடு மண்ணான மாதோட்டத்தில்
மறைந்திருந்ததேன் பொந்தை மாமருந்தை
கண்ணாரக் கண்டு கழிகூரும் காலம்
கைகூடிவிட்டதென்று களிகொள்வீரே.

ஐயா அவர்கள் திருக்கேதீஸ்வரம் கும்பாபிஷேகத்தை இங்கிருந்து பார்க்காமல் தேவர் உலகத்திலிருந்து பார்க்கச் சென்றுவிட்டார்கள்.

ஐயா அவர்களின் போதனையும் சாதனையும் இங்குள்ளவர்கள் தெரிந்துகொள்ளமாட்டார்கள் என்றே ஐயா அவர்கள் மேல்நாடு சென்று போதித்தார்கள். அதுமட்டுமல்ல ஐயா அவர்களை மேலுலக வாசிகளாகிய தேவர்கள் தங்களுக்கு போதிக்க அழைத்து விட்டார்கள். நாம் வறியவர்களானோம். இன்னும் பல நாளிருந்து எங்களுக்கு நற்போதனையையும் நல்லறிவையும் ஊட்டும் பாக்கியம் அற்றவர்களானோம். தவறு செய்தனம் என்று எம்மையே நோவது தக்கது.

ஐயா அவர்களின் ஆசி நமக்கு எப்பவும் கிடைக்க அவர்களை நாம் சமய குரவர்கள் வரிசையில் வைத்து அவர்கள் பூரணநிலை அடைந்த நாளை குருபூசையாக கொண்டு உய்திபெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரசஞான கலைக்கோயில் அமைப்போம்

—செ. சேதுபதி அவர்கள்

எமது ஆத்மஜோதியின் வாசகநேயர்களின் ஆத்மீகத் தந்தையும், இல்லற ஞானியும், ஆன்மீக அறிவுச்செம்மல், அருட்கனல் சிந்தும் ஞானத் தேன்மொழி வள்ளல், இன்பச் செழுந்தமிழ்ப் புலவர், பக்தர்க்கு ஊனுடல் உயிரும் ஈந்து உருகும் மெய்ச்சீலன், துய்ய மேன்மைகொள்சைவ நீதி உலகெலாம் விளங்கச் செய்வோன், அன்பருக்கு அன்பன் தூய அடியவர்க்கு அடியன், ஆத்ம நண்பர்க்கு நண்பன், ஞான ஞாயிறு போன்றேன், என்றும் தன்புகழ் பெருமை நோக்கா தனி அறப் பணிபுரியும் இன்ப நற் பண்பு மிக்க இராமச் சந்திரன் பேர் வாழ்க! என அன்றொருநாள் வாழ்த்தப்பட்டவரும், 'தன்னை அறியும் அறிவு தனைப் பெறில் பின்னை பிறப்பில்லை வீடு' என்ற ஔவைப் பிராட்டியின் (சரஸ்வதி அம்சம்) திருவாக்கையும் 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற திருவள்ளுவரின் (பிரம்மாவின் அம்சம்) திருக்குறள் வாக்கியத்தைப் பின்பற்றியும் பகவான் ரமணமகரிஷியவர்களின் 'நாம்' யார் என்ற வாக்கியத்தைப் பின்பற்றித் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஜீவான்மாவாகிய தன்னையும் பரமான்மாவாகிய தலைவனையும் அறிந்து, தலைவனுக்குக் கீழ்ப்படிந்து அருச்சுனரைப்போன்று பலன் கருதாது பணிபுரிந்து கொண்டிருந்த மகான் இராமச்சந்திரா ஐயா அவர்களின் 81 வயதையுடைய உடலிலிருந்து (பகவான் ரமண மகரிஷியவர்கள்சமாதி அடைந்த அதே திதியில்) உயிர் பிரிந்துவிட்டதைஅறிந்து மிகவும் துக்கப்படுகிறேம்.

இவ்வித சிறப்பு வாய்ந்த எமது ஆத்மீகத் தந்தையானவர் துருவன், சப்தரிஷிகள், அருந்ததியின் உயிர்களைப் போன்று, பேரின்ப வீடான விண்ணுலகையடைந்து ஓர் நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பதுடன், சூக்கும சரீரத்துடன் எமது உள்ளங்களிலே குடிகொண்டு எம்மை நல்வழிப்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டுமென கடவுளைப் பிரார்த்திப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி வாசக நேயர்களாகிய நாம் ஏகலை வனைப்போன்று, எமது ஆத்மீகத் தந்தையின் திருவுருவத்தைக் குருவாகப் பாவித்துச் சிந்தித்துச் செயலாற்றிக் கொண்டிருப்பது கடமையாகுமன்றோ! எமது ஆத்மீகத் தந்தையின் ஞாபகார்த்தத்திற்காக நாம் ஓர் சுத்த சமரச சன்மார்க்க சனபனய ஸ்தாபித்து அதன் மூலம் ஓர் மணி மண்டபத்தை அல்லது ஆச்சிரமத்தை சிவஞெளிபாதமலை யின் அடிவாரத்தில் கட்டி எழுப்பி, சகல சமயத்தவர்களும் வழிபடக்கூடிய சர்வாலயமாகப் பாவிக்கலாம். ஒளிவழி பாட்டில் ஈடுபடலாம். இதை ஜோதிட ரீதியில் ஓர் கலைக் கோயிலாகவும் பாவிக்கலாம். இதன் மூலம் மெய்ஞான அறிவைப் பெறலாம். ஐயா அவர்கள் ஓர் ஜோதிட நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐயா அவர்களின் திருவுருவத்தை எமது உள்ளத்தில் நிலைநிறுத்தி இக்கடிதம் எழுதப்பட்டதால் இதிலுள்ள எமது வேண்டுகோள் ஐயாவின் அனுமதியுடன் எழுதப் பட்டதாகப் பாவித்துச் சிந்தித்துச் செயலாற்றுமாறு அன் புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இராமச்சந்திரனூர் அவர்கள் தெய்வபக்தி முதிர்ந்து கனிந்ததோர் அன்புக்கனி. சமய தத்துவம், இலக்கியம், கவிதை, சரித்திரம், வானசாஸ்திரம் என்ற தொடக்கத்துப் பல் வேறு துறைகளில் முழுகித் திளைத்தவர்கள். காலந்தோறும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஆத்மஜோதி முதலிய இதழ்களில் அவர்கள் எழுதிய கட்டுரைகள் பலதுறைப்பட்டவைகள். அவைகள் அவ்வத்துறை கைவந்தவர்களுக்குச் சிறப்பாகப் பயன்படுதல் மாத்திரம் அமையாது, சமய பக்தியை வளர்த்தலினாலே யாவருக்கும் பொதுவாகவும் பயன்படுப்வை.

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி ஈன்றெடுத்த தவப்புதல்வர்

— கே. பி. ஹரன் அவர்கள்

எனக்கு வாழ்விலே நல்வழிகாட்டிய பெரியார்களுள் ஒருவரான இராமச்சந்திரனின் மறைவைக் கேட்டதும் என் உள்ளம் என்னையும் அறியாமல் பதறியது.

தெய்வம் இல்லை என்று சொல்லாவிடினும் தெய்வம் உண்டு என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படாத காலத்திலே 'இன்குவெஸ்ட் ஆப் காட்' (தெய்வத்தைத் தேடி) என்ற தலைப்பில் சுவாமி ராமதாஸ் அவர்கள் எழுதிய அருமையான அனுபவ நூலைத் தாமாகவே அன்புடன் எனக்குப் படிக்கத் தந்தார் இப்பெரியார், இவனும் உய்ய வேண்டுமென்ற பெருங்கருணையினாலே. தெய்வம் என்பதோர் சித்தம் ஏற்பட வழிகாட்டியவரை மறக்க முடியுமா?

நம்மில் பெரும்பாலோரும் நாத்திகர்களாகத்தான் முதலில் இருந்தோம். வாழ்க்கையில் அடிபட்டு, அடிபட்டு செல்லும் வழிதெரியாது திகைக்கையில் இராமச்சந்திரனைப் போன்ற ஒரு ஞானி இறை அருளாலே முன்வந்து 'அன்புமிகுந்த தெய்வம் உண்டு. துன்பம் அத்தனையும் போக்கிவிடும்' என்ற புதிய நம்பிக்கையை நமக்கு அளித்து நம்மை உய்யச்செய்கின்றார்கள். இப்பெரியாரால் ஈழத்தில் மட்டுமல்ல. உலகில் பல நாடுகளிலும் உய்வுபெற்றவர்கள் கணக்கில் அடங்கா.

பல்லாண்டுகளுக்கு முன்பாக கொழும்பிலே, இளம் வாலிபர்களான பல அரசாங்க ஊழியர்களை 'சத்சங்கமாக' இப்பெரியார் கூட்டினார். தெய்வ நம்பிக்கையையும்; சமய சமரசத்தையும் ஏற்படுத்தும் வகையில் கூட்டுப் பிரார்த்தனையை நடத்தினார். அதில் பன்முறையும் கலந்துகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கொண்ட வாலிபர்கள் ஆலம் விழுதுகள் போல் ஆங்காங்கே வேரூன்றி சமய சமரசத்தையும் பக்தியையும் இப்போது வளர்த்து வருவதைப் பார்க்கிறோம்.

ஆத்திகத்தைவிட இன்று உலகுக்கு அதிகம் தேவைப் படுவது சமய சமரசமேயாகும். இந்தியாவை அன்னியர்கள் ஆட்சி செய்த காலத்தில், மதப்பூசல்களைக் கிளப்பிவிட்டு பிரித்தாளும் தந்திரத்தை கையாண்டனர். சாதி, மொழி மதம் என்ற வெறிகளைக் கிளப்பி விட்டனர். இன்றும்கூட மதங்களின் பெயரால் ஆங்காங்கே வெறிகள் கிளம்பி நம் அமைதியைக் கெடுக்கின்றன.

இந்த ஆபத்தைத் தவிர்க்க மகாத்மா காந்தி 'ஈச்வர அல்லா தேரே நாம்' (ஈசுவரன் அல்லா என்பனவெல்லாம் உந்தன் பெயர்களே) என்று சமரச பஜனைகளைச் செய்வித் தார். உலகில் பல நாடுகளிலே மதவெறி ஆபத்து இன்னும் விட்டபாடில்லை. நாஸ்திகத்தைவிட்ட மதங்களின் பெய ராலேயே உலகிலே அதிக சண்டைகளும் உயிர்ச்சேதங் களும் ஏற்பட்டுள்ளதாக உலக சரித்திரம் கூறுகின்றது.

இதற்காக சமயங்களை ஒழிப்பதா? மூட்டைப் பூச்சிக் காக ஊரையே கொளுத்துவதா? சமய சமரசத்தையும், தெய்வ பக்தியையும் ஏற்படுத்த மகாத்மா உள்ளிட்டு பல பெரியோர்கள் வழிகாட்டினர். அவ்வழியை இராமச்சந் திரனும் பின்பற்றி, 'ஆத்மஜோதி', 'ரிலிஜீயஸ்டை ஜெஸ்ட்' (சமய மஞ்சரி) என்ற சஞ்சிகைகளை ஆரம்பித்து நடத்தி, சமய சமரசத்தை தமிழரிடையே மட்டுமன்றி உலகில் பல நாடுகளிலும் மக்களிடையே ஏற்படுத்த முன் வந்தார். அவர் பேசியுள்ள கூட்டங்களுக்குக் கணக்கில்லை. இப்பெரியாரால் ஈழத்தின் புகழ் உலகில் பரவியுள்ள துடன் பல பெரியார்களும் ஈழத்துக்குப் பல நாடுகளிலிருந் தும்வந்துள்ளனர்.

மகாத்மாகாந்தி, சுவாமி சிவானந்தர், சுவாமி ராம தாஸ், சுவாமி சுத்தானந்தர் முதலிய மகான்களை இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கு அழைத்து, தமது வீட்டில் உபசரித்து, நாடெங்கும் அருள் வெள்ளத்தைப் பாய்ச்சினூர். அவரது இல்லம் ஓர் ஆசிரமம். பூசை அறை புனிதமான ஒரு கோயில். இலங்கையில் இனக்கலவரம் நடந்தபோது, 'கலகக்காரர்கள் நெருங்கிவந்த சமயம், இப்பெரியார் தமது குடும்பத்தாருடன் பூசை அறையிலிருந்து பஜனை செய்தார். "இந்த வீட்டைத் தாக்க வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டே கலகக்காரர்கள் நேரே சென்றுவிட்டார்களாம். திருவருள் அவரையும் குடும்பத்தாரையும் எப்படிப் பாதுகாத்தது! எவ்வளவு தெய்வ நம்பிக்கை!

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அசங்கானந்தர் ரத்னம் ஆஸ்பத்திரியில் பல வாரங்கள் சிகிச்சை பெற்று வந்தார். பல டாக்டர்கள் பார்த்தனர். ஆனுல் குணமடையவில்லை. ஸ்ரீ இராமச்சந்திராவை வரவழையுங்கள் என்முர் சுவாமி. அவர் என்ன டாக்டரா? என்று சிலர் கேட்டனராம். பெரியார் வந்தார். சுவாமியுடன் கட்டிலில் அமர்ந்து, அவர் கையைப் பிடித்து, மௌன பிரார்த்தனை செய்ததும் சுவாமிக்கு உடன் குணம் ஏற்பட்டு, மறுநாளே நோய் தீர்ந் துவிட்டதாம்.

அவர் ஓர் இல்லற ஞானி. பல பெரியோர்களின் அருளாசியால், அவர் குடும்பம் தழைத்தோங்குகிறது. மூத்த புதல்வர் உலகப் புகழ்பெற்ற கண் டாக்டர். மற்ருெரு புதல்வர் நம்மைக் காக்கும் புகழ்பெற்ற காவலர். அவரது இரு புதல்விகளின் தெய்வீகக் குரல் எம் உள்ளங்களிலே என்றும் இன்பத் தேன் பாய்ச்சுகிறது.

நயினை நாகபூஷணி ஈன்றெடுத்த தவப்புதல்வரான அப்பெரியாரின் இல்லம் ஓர் ஆத்மீக பவர் ஹவுஸ். இராமச்சந்திரனூர் மறைந்தார். ஆனுல் அவரது புகழுடல் மறையவில்லை. அவரும் அவரது தெய்வீகக் குடும்பத்தாரும் நீடூழி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் செய்யும் சிறந்த அஞ்சலி

—முகம்மது காசிம் அவர்கள்

ஆத்மஜோதியின் கௌரவ ஆசிரியராகிய உயர் திரு. க. இராமச்சந்திரா அவர்கள் மறைந்த சோகச் செய்தி அறிந்து நானும் மதார் நாச்சியாவும் பெரிதும் துயரமடைந்தோம்.

அவர்களது பிரிவு நம்நாட்டிற்கு மட்டுமல்ல, அகில உலக ஆத்மீக அன்பர்கள் யாவருக்கும் அதிர்ச்சியூட்டுவதாகும். ஏனெனில், அவர்கள் வாழ்வின் பெரும்பகுதியை மனித வர்க்கத்தின் நன்மைகருதி, சேவை மனப்பான்மையுடன் பல தொண்டுகள் செய்து, பக்தியுடன், வெகுடண்டடன் வாழ்ந்துசாட்டிய சிறந்த மஹான். அவர்களது பண்பும், பணிவோடு கூடிய தன்னலமற்ற தெய்வீக சேவையும் என்றும் மறக்கமுடியாதவை.

அன்புள்ளங்கொண்ட ஐயா அவர்கள் வாழும் பொழுது இதயத்தில் இறை உணர்விலே ஒன்றுபட்டு பரவசமெய்தி, தூய பரிசுத்த துறவிபோல் வாழ்ந்து நம் யாபேர்களுக்கும் வழிகாட்டிய ஈடுஇணையற்ற உத்தம இல்லறஞானியாகும்.

அவர்களின் புனித வாழ்வு பாரினிலே பல திசைகளிலும் ஆத்மீக அறிவையும், தெய்வீகப் பண்பாட்டையும் பரப்புவதிலேயே அர்ப்பணிக்கப்பட்டது. ஆகவே, அவர்கள் விட்டுச்சென்ற அந்த தெய்வீக லட்சியத்தை நோக்கி நாம் யாபேர்களும் பாடுபடுவதே அவர்களுக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

---

அல்லல் களைந்து அகத்தின் இருள்போக்கி நல்வாழ்வின்
தொல்லையெலாந் துடைத்தின்பம் துலங்கவைக்கும்—நல்லூரில்
கந்தவேள் காணஅயலில் அமர்கைலாச பிள்ளையாம்
சுந்தரரின் சுகுண மலர்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவாழ்வு பெற்றவர்

—ச. அம்பிகைபாகன் அவர்கள்

திரு. இராமச்சந்திரா அவர்கள் மறைவால் ஈழநாடு ஒரு சிறந்த சமயத் தலைவரை இழந்துவிட்டது. அவர்கள் சமயத்துக்குப் பல துறைகளில் தொண்டாற்றியுள்ளார்கள். அவற்றுள் தலைசிறந்தது காலத்துக்குக் காலம் சமயப் பெரியார்களை ஈழத்துக்கழைத்து, அவர்களை ஈழநாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததாகும். இப்பணியால் யாரும் சிற்சில வேளைகளில் அவர்களுடன் ஒத்துழைத்ததுண்டு. அவற்றில் இரண்டை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவது சுத்தானந்த பாரதியாரை வரவேற்றதாகும். பாரதியார் நூற்றுக்கணக்கில் நூல்களை எழுதி சமயத்துக்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றியுள்ளார்கள். இதனை உணராத சிலர் அவர்கள் வருகையை எதிர்த்தனர். இவ்வெதிர்ப்புக்கிடையில் அவர்களுக்கு யாழ்ப்பாணத்திலேபல இடங்களில் சிறந்தவரவேற்பளித்தோம். இந்த எதிர்ப்புக்காட்டியவர்கள் நினைவு பொய்யாய், பழங்கதையாய், கனவாய் போக சுத்தானந்தர் நினைவு என்றும் நிலைத்திருக்கும்.

மற்றையது சுவாமி இராமதாசரையும் அவர்களுடைய திருக்கூட்டத்தைச் சேர்ந்த அன்னை கிருஷ்ணுபாயையும், சுவாமி சச்சிதானந்தரையும் வரவேற்றதாகும். சுவாமி இராமதாசர் ஈழத்துக்கு வரமுன்னரே அவர்களின் நூல்கள் சிலவற்றை யோகர் சுவாமிகள் தமிழில் மொழி பெயர்ப்பித்துவெளியிட்டிருந்தார்கள். சீவன் முத்தர்களில் பலதரப்பட்டவர்களை நாமறிவோம். இவர்கள் பாலர் போலவும், பித்தர் போலவும், பேயர் போலவும் இருப்பார்களெனச் சரித்திர நூல்கள் கூறும். இவர்களில் பாலர் போன்றவர் சுவாமி இராமதாசர். அவர்களின் திருமுகத்தில் எப்பொழுதும் புன்சிரிப்புத் தவழ்ந்துகொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும். எச்சந்தர்ப்பத்திலும் ஒரு கடுஞ்சொல் உபயோகிக்க மாட்டார்கள். அன்னை கிருஷ்ணுபாயும் சுவாமி சச்சிதானந்தரும் தமது குருவுக்குச் சேவை செய்வதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர்கள். இத்திருக்கூட்டத்தை தரிசிக்கவும், அவர்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பையும் திரு. இராமச்சந்திரா அவர்கள் மூலம் பெற்றேன். இதற்காக அவர்களுக்கு யான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

திரு. இராமச்சந்திரா அவர்கள் நிறைவாழ்வு பெற்றவர்கள். அவர்கள் முன்மாதிரியை நாம் பின்பற்றுவோமாக.

## அன்பர்கள் இரங்கல் செய்திகள்

இன்று பத்திரிகைகளில் பார்த்த பின்பே பெரியார் திரு. க. இராமச்சந்திரா அவர்கள் மறைவுபற்றி அறிந்தேன். இந்து சமயத்தைப்பற்றி, விவேகானந்தா அடிகளாரைப்போல, உலகெங்கும், முக்கியமாக வெள்ளையர்கள் வாழும் நாடுகளுக்குச் சென்று அச்சமய உண்மைகளைப் பிரசாரம் செய்த இப்பெரியாரின் மறைவு எமது சமயத்தினருக்குப் பெரும் இழப்பாகும். நான் இலங்கை இந்துவில் எழுதிவரும் "இணையிலா இந்துமதம்" என்ற நூலுக்கு திரு. இராமச்சந்திரா அவர்கள் இணையிலாத ஒரு சிறப்புரையை வழங்கியுள்ளது தாங்களறிந்ததே. அன்னாரின் மறைவு குறித்து மிகவும் ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் அவரின் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனருள் புரியுமாறு பிரார்த்திக்கின்றேன்.

— அ. ச. அருணாசலம் — மாத்தளை.

கடந்த கால் நூற்றாண்டு காலமாய் ஆத்மஜோதி (இதழ்) கௌரவ ஆசிரியராகவும் பல நல்ல நூல்களை சைவ அபிமானிகளுக்கு வெளியிட்டும் தன் பெயரை இப்புவி உலகில் வாழும் சகல மக்களும் நினைவு கூரும் அளவுக்கு பணியாற்றியுள்ளார். அவரின் நாமம் என்றும் இப்புவியில் நிலவும். ஸ்ரீ ஆத்மஜோதிக்கு அவரின் இழப்பு பேரிழப்பாகும்.

—M.C.கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை,
நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரமார்த்தீக விண்ணின் திவ்ய அருட்தெய்வ, அகில உலக சைவப் பெரியார் அருட்திரு. இல்லற ஞானி, ஆத்மஜோதியின் ஸ்தாபகர் திரு. கே. ராமச்சந்திரா அவர்கள் சிவபதமடைந்ததை முன்னிட்டு நானும் என் குடும்பமும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக. ஸ்ரீலங்காவில் ஓர் ஆத்ம ஞானியை இழந்து இலங்கை வாழ் பக்தர்கள் ஆறாத் துயரில் இன்று மூழ்கி விட்டார்கள்.

இனி இவரைப் போன்ற உன்னத மகரிஷியை நாம் காணப்போவதில்லை. ஆத்மா சாந்தி அடைவதாக.

— முருகையா குடும்பத்தினர்
தலவாக்கொல்லை.

நமது இந்து சமயப் பெரியாரும் இல்லற ஞானியும் தெய்வ அருள்பெற்ற மஹாமேதையுமான க. இராமச்சந்திரா அவர்களின் மறைவு நமக்குமட்டுமின்றி உலகத்தில் பேரின்பத்தை நாடும் ஒவ்வொரு ஜீவனுக்கும் பெரும் இழப்பாகும் எல்லாம் வல்ல இறைவன் அவரின் உடல் மறைந்த போதும் அவரின் உயிர் எல்லா ஜீவன்களினிடத்திலும் நிலைபெற என்றும் பகவான் அருள்புரிவாரென நம்புகிறோம். மற்றும் அவரின் மறைவுக்கு எங்களின் குடும்பத்தின் சார்பாகவும் நுவரெலியா அபிமானிகள் அனைவருடைய சார்பிலும் ஐயாவுடைய குடும்பத்தினர் அனைவருக்கும் எங்களது அனுதாபத்தை மிகவும் வருத்தத்துடன் அறிவித்துக்கொள்கிறோம்.

ஆர். எஸ். பழனியாண்டிப் பிள்ளை தம்பதிகள்
நுவரெலியா.

---

இராமச்சந்திரனுர் அவர்கள் பழைய இந்தியத் தத்துவ உலகத்தைத் தமிழ் உலகத்திற்கும் மேல்நாட்டுக்கும் அறிமுகம் செய்துவரும் அரியதொண்டினை ஆற்றி வந்தார். இவர் ஒரு சைவப் பெரியார் என்று சைவர்கள் கொண்டாடுகிறார்கள். மற்றவர்கள் சமரசஞானப் பேரறிஞர் என்று போற்றுகிறார்கள். —தெ. பொ. மீனுட்சிசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் கருதாத கர்மயோகி!

—செ. தனபாலசிங்கன் அவர்கள்

மகான் இராமச்சந்திரா ஐயா அவர்கள் இன்று எம்மிடையே இல்லை; ஆனால் அவர் பேர் என்றும் வாழும்! வளரும்! பகவான் ரமணர் சமாதி அடைந்த அதே திதியில் மகான் இராமச்சந்திராவும் இயற்கை எய்தினார் என்று அறிகின்ற போது குருசீட பாரம்பரியம் இந்தநாட்டிலே இன்றும் நன்றாக நிலைபெற்றிருக்கின்றது என்று சொல்ல ஆசைப்படுகிறோம்.

நம்முடைய இராமச்சந்திரா ஐயா அவர்களைப் பற்றிச் சிந்திக்கின்றபோது ஈசனின் மொழி, இரகசியம், மௌனம் ஆகிய மூன்றையும் காட்டிக்கொண்டு ஆத்மானந்தம் ஒன்றிலேயே திளைத்திருக்கின்றார் என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. இன்னும் சிறப்பாகச் சொன்னால் ஐயா அவர்கள் இறைவனின் இரகசியத் தூதுவராக இருந்து அகில உலகமும் தலைவணங்கும் அளவுக்குப் பெரும்பணி புரிந்திருக்கின்றார். மௌனத்தையே தாரக மந்திரமாகக் கொண்டு உலகைச் செயலில் ஈடுபடுத்திய பெருமை ஐயாவுக்கு உண்டு! கருணை, கல்வி, கடமை என்ற மூன்று பெரும் பண்புகளும் மகான் இராமச்சந்திரா அவர்களின் இரத்தத்திலே ஊறி இருதயத்திலே அடித்திருக்கின்றன. ஐயா அவர்கள் ஒரு தனிப்பெரும் சர்வ கலாசாலையாக விளங்கித் தோன்றினார். நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக'' என்ற காரைக்காலம்மையாரின் பெரும் பாடலுக்கு ஐயா அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

பயன்கருதாத கர்மயோகத்துக்கு அற்புதமான ஆற்றல் உண்டு. இந்தச் சிருட்டி முழுவதுடனும் ஒருமைப்பாடு கொள்வதற்குக் கர்மயோகம், சந்நியாசம் ஆகிய இரண்டும் பூரண நிலையில் ஒன்றுபோலவே இருக்கும். அதனால் கர்மயோகத்துக்கு மதிப்பு அதிகம். காரணம் என்ன? கர்மயோகம் வழியிலும் செல்ல வேண்டிய இடத்திலும் இருக்கின்றது. ஆனால் சந்நியாசமோ இறுதி எல்லையில் அன்றி வழியில் இல்லை. இதனை விளக்கமாகச் சொன்னால், கர்மயோகம் சாதனையும் நிஷ்டையுமாக இருக்கும். ஆனால் சந்நியாசம் வெறும் நிஷ்டையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். பூரண கர்மயோகம் சந்நியாசம்; பூரண சந்நியாசம் கர்மயோகம். ஆனுல் சாதகனுக்குக் கர்மயோகமே இலகுவாக இருக்கும். ''எதையும் செய்யாமலே எல்லாவற்றையும் செய்தல்; எல்லாம் செய்தும் ஒன்றுமே செய்யாமை'' என்ற இவற்றை விளங்கிக்கொள்வது சற்றே கடினம். மகான் இராமச்சந்திரா அவர்களை நம் முன் நிறுத்திப் பாருங்கள். எல்லாம் இலகுவில் விளங்கி விடும்! ''புருஷன் கர்மங்களை அநுட்டிக்காமையினுல் கர்மா தீதத்தை அடையவில்லை. வெறும் சந்நியாசத்தால் நிறை நிலையைப் பெறுவதும் இல்லை'' என்றுதானே கீதையும் முழங்குகின்றது.

அவர் சமயபேதம் கடந்த வேதாந்த முனிவர். அவர்களின் உள்ளத்திலே தனிமுயற்சி இன்றிப் பல்கலையும் ஆற்றலும் ஊழின் வழிவந்தன. 'லோக சங்க்ரகம்' என்ற நிகரற்ற பணியை அவர்கள் செய்தார்கள். தம்முடைய தவத்தின் சக்தியினுலும், சொல்லாற்றலினுலும் ஸநாதன தர்மத்துக்குப் புத்துயிர் அளித்தார்கள். உலகத்துக்கு அபயம் அளிக்கும் துறவிகள் தனிமையை விரும்புவது இயல்பு. இருந்தும் உலக க்ஷேமத்துக்காக அவர்கள் நடமாடும் தெய்வங்களாகி விடுகின்றுர்கள். இந்த வரிசையில் வந்தவர் நம்முடைய இரகசியத் தூதுவர் இராமச்சந்திரா அவர்கள்.

பகவான் ரமணர், சுவாமி சிவானந்தா, ஆனந்தாசிரமம் சுவாமி இராமதாஸ், யோகி அரவிந்தர் முதலாம் மகான்களில் ஈழம்வாழ்... பலருக்கு ஈடுபாடு உண்டு. அதற்கு அடிகோலியவர்களும் ஐயா அவர்களே! எண்ணியதைச் சொல்லி, சொல்லியதைச் செயலில் காட்டினுர். சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒருமைப்படும் நிலை மருந்துக்கும் காண முடியாத இந்தக் காலத்திலே மகான் இராமச்சந்திரா வாழ்ந்த வாழ்வு 'மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த வாழ்வு' காந்தி மகாத்மா ஆனமைக்குச் சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒருமைப்பட்டதும் ஒரு காரணம் ஆகும்! சிந்தனையும், சொல்லும், செயலும் ஒருமைப்பட்ட மகான் இராமச்சந்திராவும் இன்று மகாத்மா ஆகிவிட்டார்! வாழ்க அவர் நாமம்! வளர்க அவர் பணி!! இல்லற ஞானிஇராமச்சந்திரா ஆன்மீக அறிவுச் செம்மல்! அருட்கனல் சிந்தும் ஞானத் தேன்மொழி வள்ளல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் மாண்பு

—அமரர் க. இராமச்சந்திரா அவர்கள்

மாந்தர் தம்மோடு அநாதியே தொடர்புடைய இறைவனை மறந்து, இப்பிறவியில் மட்டும் உண்டான தொடர்புகளில் ஈடுபடும் பேதமை காரணமாக; வாழ்வில் பெருந்துயர் அடைகின்றனர். அவர்களைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு, கருணையே உருவான பெருமான் தூதுவர் போல் அனுப்புவனவற்றுள் மிகவும் சக்தி வாய்ந்தது மரணமேயாகும். மரணம் எப்போதும் எங்கும் நிகழ்ந்து கொண்டிருப்பினும், அதனைப்பற்றி அநேகர் ஆழ்ந்து சிந்திப்பது கிடையாது. தங்களோடு நெருங்கிய அன்புறவு பூண்ட உற்றாரையோ மித்திரரையோ அது தீண்டும்போது தான் அவர்கட்குஅதைக்குறித்தஅச்சமும்ஏக்கமும்துக்கமும் ஏற்படுகின்றன. ஆனால் பெரும்பாலோர்க்கு அதுவும் பயன் படாமற் போய்விடுகிறது. ஏனெனில், அவர்கட்குத் தற்காலிகமாக வந்த சுடலை ஞானம், பழையபடி உலக போக்கியப் பொருள்களின் சேர்க்கை காரணமாக, நாளடைவில் மறைந்துவிடுகிறது.

மரணத்தை நினைத்த மாத்திரத்தில் ஞான மார்க்கத்தில் திரும்புவோர் மிகச் சிலரே. இச்சிறு கூட்டத்தில் விசேடித்தவர்கள் பகவான் புத்தரும், இன்று ஒப்புயர்வற்ற உலக குருவாய் திருவண்ணமலையில் எழுந்தருளியிருந்தவரான பகவான் ஸ்ரீ ரமணமகரிஷிகளுமாவர். ஸ்ரீ ரமணமூர்த்தி கூறியதாவது :-

''ஒருவன் தூங்கிச் சொப்பனம் காணும்போது, அவன் காணுவதெல்லாம் இன்பம் போல் இருக்குமட்டில் அவன் விழிக்கப்போவதில்லை; துன்பமயமான காட்சிகளே விழிப்பைத் தரும். அதுபோல் உலகம் இன்பமயமாகத் தோன்றும்வரை, சம்சாரி மனிதன் உலக மாயையினின்றும் விழித்துத் தன் உண்மையை உணர மாட்டான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்சாரத் துன்பம், மரண பயம் முதலிய உணர்ச்சி உண்டானால்தான் கதிபெறக்கூடும்.''

மேலும், பகவான் அருளிய "உள்ளது நாற்பது" என்னும் அரிய ஞான நூலின் இரண்டாவது மங்களப் பாட்டான கீழ்க்கண்ட வெண்பா, மரண பயத்தைப் போக்கும் நிவர்த்தி மார்க்கத்தை மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகிறது:-

மரணபய மிக்குளவம் மக்களர ணாக
மரணபவ மில்லா மகேசன் சரணமே
சார்வர்தஞ் சார்வொடுதாஞ் சாவுற்றார் சாவெண்ணஞ்
சார்வரோ சாவா தவர்.

'மரண பயம் அதிகமாயுள்ள மனிதர்கள் அப்பயம் அறும்பொருட்டு, இறப்பும், பிறப்பும் இல்லாத இறைவனிடம் அடைக்கலம் புகுவர். அப்படிச் செய்யவே அவர்களுடைய 'நான்' 'எனது' என்பவை அற்றுப்போம். எஞ்சி நிற்பது சாவில்லாத ஆன்மாவே. ஆகையால், அவர்கள் பின்னும் மரணத்தைப்பற்றி எண்ணுவார்களோ?' இதுவே, மேலே எடுத்தாளப்பட்ட வெண்பாவின் தாத்பர்யம்.

பூர்வ புண்ணியத்தால் கிடைத்துள்ள இந்த மனித உடலம் விழுமுன்னரேயே மரணத்தின் தத்துவத்தை நன்கு ஆராய்ந்து அதற்குப் பரிகாரம் தேடவேண்டியது அறிவுடையோர் கடமை.

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர்தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத்தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலங்கமை ஞானி

— பிரதம நீதிபதி வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

ஏப்ரல் 26-ம் திகதி; திங்கட்கிழமை; இரவு 7—25 மணிக்குத் தலங்கமை ஞானி திரு. இராமச்சந்திரா அவர்கள் புகழுடம்பு எய்தினூர்கள். அவரது குருதேவரான ரமணமகரிஷி மறைந்த மாதமும், நாளும், நேரமும் அதுவே என்பதை அறியும்போது அந்தப்பொருத்தமும் சிறப்பும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவர் வாழ்ந்தது போலவே—அமைதியான முடிவு அவருக்கு வாய்த்தது.

ஆதியிலிருந்தே அவரது வாழ்வு மன்னுயிர் ஓம்பும் சேவை வாழ்வாக அமைந்து அவரது இதயத்தில் அன்பும் இரக்கமும் ததும்பி நின்றன. சாதி, மத, இன, வேறுபாடுகளுக்கு அங்கு இடமே இல்லை. நீதிக்காகவும், நியாயத்துக்காகவும் அஞ்சாமல் போரிடும் அச்சமறியா வீரவுள்ளம் படைத்தவர் அவர். அரசாங்க சேவையில் அவர் கடமையாற்றியபோது, நிர்வாக அநீதிக்குப் பலியாகி அவருடைய உதவி நாடி வந்த அதிகாரிகள் பலர். அவர்களில் பலன் பெருமல் திரும்பினோர் எவரும் இல்லையெனலாம்.

அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதைப் பல துறைகளிலும் முன்னேடியாக அவர் செய்த செயல்கள் நிரூபிக்கின்றன. வர்த்தக சங்கங்கள் இந்த நாட்டில் செயல்படுவதற்கு எவ்வளவோ காலத்துக்கு முந்தியே ஊழியர் தம் நலம் பேணுவதற்காக, ''புகையிரத ஊழியர் சங்கம்'' ஒன்று ஏற்படுவதற்கு ஆதிகாரணராக விளங்கியவர் அவர்.

மாணவனுகவோ, அரசாங்க அதிகாரியாகவோ அவர் தமது அன்ருடக் கடமைகளில் ஈடுபட்டிருந்தாலும், தெய்வ சங்கல்பத்துக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தவர். வேர்ட்ஸ்வர்த் என்ற ஆங்கில கவிஞன் கூறுவதுபோல் ''நமது விதியின் போக்கு அவலம் தருவதாகவோ சோர்வை ஊட்டுவதாகவோ எங்ஙன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருப்பினும், அது பேரருள் நிறைந்த பெரும் சக்தி ஒன்றி ஞல் நடத்தி வைக்கப்படுகிறது'' என்ற திட நம்பிக்கை அவருக்கிருந்தது. அவரது பிற்கால வாழ்வில் அவரது ஆத் மீக அபிலாஷைகள் நன்கு வளர்ந்து பூரண மலர்ச்சி அடைந்தன.

ஆத்மீகத்துறையில் அவர் பெற்றிருந்த மேன்மையை அவரது சொந்த நாட்டைவிட வெளிநாடுகள் உணர்ந்து மதித்துப் புகழ்மாலை சூட்டிப் பாராட்டின. மேற்கேயும் கிழக்கேயும் அவர் பல இடங்களுக்குச் சென்றுள்ளார். புகழ்பெற்ற சங்கங்களும் அறிஞர் தம் கூட்டங்களும் அவ ரை அன்போடு அழைத்தன. ஆத்மீகப் பேரறிஞரின் அகில உலக சமயக் கூட்டங்களில் அவர் ஞானப் பேருரை கள் ஆற்றிஞர். அனைவருடைய புகழுக்கும் பாராட்டுக் கும் பாத்திரமாளுர். அவர் செய்த பிரயாணங்களிலும் யாத்திரைகளிலும் அவர் காலத்தில் வாழ்ந்த ஞானியர் தம் உபதேசங்களையும் ஆசிமொழிகளையும் நேரடியாகப் பெறும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. பல சமயங் களுக்குரிய புனித விடங்களில் அவருக்கேற்பட்ட ஆத்மீக அனுபவங்களை அற்புதங்கள் என்றே கூறலாம். இவை எல்லாவற்றுடனும் அவருடைய குருதேவராகிய ரமண பகவானுடன் தொடர்ந்து விளங்கிய ஞான நல்லுறவும் சேர்ந்து அவரை இறைவனேடு இணைந்து வாழும் இல்லற ஞானியாக்கிற்று.

சமயப்பற்றிய அவரது பரந்த மனப்பாங்கும் சிந்தனை யுமே அவர் ஒரு 'சமய மஞ்சரி'யை உருவாக்க உதவின. ஆங்கிலத்தில் வெளிவந்த அவரது 'சமய மஞ்சரி' (Religious Digest) அகில உலகப் புகழை அவருக்கு ஈட்டித்தந்ததுடன், உலகின் ஞானச்சிகரங்களுடைய நல்லுறவையும் ஏற்படுத் திற்று. யார் யார் எப்பெயரிட்டு அழைத்தாலும் அனைவ ரும் வணங்கும்பரம்பொருள் ஒன்றேஎன்றஉண்மையை அவர் தமது உரைகளிலும் உபதேசங்களிலும் வலியுறுத்தி வந் துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. முத்தையா அவர்களுடன் சேர்ந்து அவர் தொடங்கிய 'ஆத்மஜோதி' என்ற சமய சஞ்சிகையே இந்த நாட்டின் ஆத்மீகவாழ்வின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இறுதிவரையும் அவர் இந்த மேதகு பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகக் கடமையாற்றிவந்தார்.

கத்தோலிக்கத் திருக்குடும்ப கன்னியர் 64 பேருக்கு இந்து மதத்தைப்பற்றித் தொடர்ச்சியாய் உரைகள் நிகழ்த்துமாறு அவருக்கு விடுத்த அழைப்பு, அவருக்கு அளிக்கப்பட்ட ஈடிணையற்ற சிறப்புக்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது. அவர் தம் இந்து மதம்பற்றிய அறிவாலும், சிந்தனைத் தெளிவு, பிற உலக மதங்கள் பற்றிய அறிவு விசாலம், எல்லாவற்றுக்கும் மேலாக சத்தியத்தை அறியும் நாட்டம் இவை யாவற்றையும் இந்தப் பேருரைகளிலே நாம் காணக்கூடியதாக விருக்கின்றது. கன்னியர் மடஅதிபரின் வேண்டுகோட்கிணங்க 'இந்துமத சாரம்' Hinduism in a Nutshell) என்னும் தலைப்பில் இவ்வுரைகள் ஆங்கிலத்தில் ஒரு அழகிய நூல்வடிவில் வந்துள்ளன.

கடந்த அரைநூற்றண்டுகளாக அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிய எழுத்துக்களையும் ஆற்றிய உரைகளையும் சேர்த்தால் எத்தனையோ புத்தகங்களாக்கலாம். சமயம், தத்துவம், ஞானியர் தம் வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றி அவர் எழுதிய கட்டுரைகளிற் சில 'சமரசஞானக்கோவை' என்ற நூலாக வெளிவந்துள்ளன. கவியோகி சுத்தானந்தபாரதி, கி. வா. ஜகந்நாதன், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலிய அறிஞர், பெருமக்கள் இந்நூலைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். ஆங்கிலத்தில் அவர் எழுதிய நூல்கள், பிரசுரங்கள் சில பின்வருவன: 'சோதிடம் ஒரு விஞ்ஞானவியல்—சமயத்துக்கும் விஞ்ஞானிகளுக்கும் ஒரு சவால்' (Astrology as a Science a challenge to church and Scientists), 'தமிழர் தம் சமயங்கள்—அன்றும் இன்றும்' (Religions of the Tamils—Past and Presents), 'ஞானியர் தம் கூட்டத்தில்' (In the Company of Saints), 'தாயுமான ரிஷியின் நற்செய்தி' (The message of Saint Thayumanavar), 'மனித குலத்தின் உறுதிப்பாடு' (The Solidarity of Humankind), 'மாதரும் உலக சமாதானமும்' (Women and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Peace', 'வாழ்வின் ஒருமைப்பாடு' (The Unity of Life), 'காந்தியும் அவர் உலக சமாதானத்துக்கு ஆற்றிய பணி யும், (Gandhi and his Contribution to World Peace).

நோர்வே நாட்டின் பாராளுமன்றம் தனது சிறப்புக் கூட்டத்தில் பேருரை யாற்றும்படி அவருக்கு அழைப்பு விடுத்தது. அகில உலக நிலையில் அவர் வகித்த உயர்ந்த இடத்துக்கு மேலும் சிறப்பைக் கூட்டுவதாக இது அமைந் தது. தேசத் தலைவர்களும் பிரதம மந்திரிகளும் மட்டுமே இந்தச் சிறப்பைப் பெற்றவர்கள். 'ஐரோப்பாவும் உலக சமாதானமும்' என்ற தலைப்பில் அவர் ஆற்றிய பேருரை கேட்டு அந்நாட்டின் எல்லாக் கட்சித் தலைவர்களும், பத் திரிகையாளர்களும் ஏகோபித்து மனமாரப் பாராட்டினர். அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு நோர்வேயில் ஒஸ்லோ நகரத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி நூற்றாண்டு விழா வின் ஆரம்பத்தில் சிறப்புரையாற்றும் பெருவாய்ப்பு அவ ருக்குக் கிடைக்கப் பெற்றது. அவ்விழாவில் நோர்வே மன் னரும் சமுகமாயிருந்தனர்.

சமய நிறுவனங்கள் மூலம் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அவர் ஆற்றிய சேவை பலருக்குத் தெரி யாமலிருக்கலாம். ஆனால் அப்பணியை, சமாதானத்துக் காக நோபல் பரிசுபெற்ற பெல்ஜிய நாட்டுத் துறவி வண. பிதா. பயர் போன்ற உலக ஆத்மீக சமயத் தலைவர்கள் நன்கு உணர்ந்து பாராட்டினர். சில வருடங்களுக்கு முன்பு அவரது பெயரும் வேறு இரு சமயத்தலைவர்களு டன் நோபல் சமாதானப் பரிசுபெறச் சிபார்சு செய்யப் பட்டிருந்தது. சில பலம் வாய்ந்த மேற்கு நாடுகள் தமது நாட்டு அரசியல்வாதிகளுக்கு இப்பரிசு செல்ல வேண்டு மென்று இதற்குத் தடையாய் நின்றிராவிடின், அவ்வரு டம் இப்பரிசு அவருக்கும் மற்றிருவருக்கும் நிச்சயமாகக் கிடைத்திருக்கும்.

அவரை நாம் இழந்துவிட்டோம். வேதனை தரும் இழப்பு அது. ஆயினும் அவரது ஆத்மீக சக்தி எம்மிடை யே வியாபித்து நிற்கும். அவரை நேரில் அறியும் வாய்ப் புப் பெற்றவர்களுக்கு மட்டுமன்றி அவரை அறிய வரு வோர் அனைவருக்கும் அந்த சக்திவாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐய மில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளலை மறக்கவும் படுமோ?

இதம்தரு மொழியும் தவளவெண் திருநீ
றிலங்கிடு நெற்றியும் எவரும்
விதந்திடு நெடிய தோற்றமும் முத்த
வெண்ணிலா முரலும் வேலா
யுதன்தனை யுதவு மரகதமேனி
யுமையவள் பதாம்புய மலரே
நிதம்தொழும் நாவும் பொருந்துரா மச்சந்
திரர்பெயர் மறக்கவும் படுமோ.

பல்கலை விநோதன் சமரசஞானம்
பரப்பிய ரமணரின் தாதன்
எல்லையில் சூதன்என இவண் வாழ்ந்து
இமையவர்க் குச்சிவ போதம்
நல்கிடவேதன் அரிபுருகூதன்
நயந்து நின்றே வரவேற்க
தில்லையில் நாதன் பதமணை ராமச்சந்
திரர்பெயர் மறக்கவும் படுமோ.

ஆன்மிக வேட்கை தணிக்கு மூருணியாய்
அறிவொளி பரப்பு சூரியனாய்
தேன்மலி கொன்றைச் சிவன்மதம்
மேலைத் தேயத்துக் கியம்பு தூதுவனாய்
நோன்புடைத் தவத்தோர் ஞானிகள் ஏத்தும்
நுணுகிய கேள்வி வித்தகனாய்
வான்புகழ் நிறுத்த ராமச்சந்திரராம்
வள்ளலை மறக்கவும் படுமோ.

—கரவை. வ. சிவராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L 359/00.

# சந்தா நேயர்களுக்கு!

**அன்புடையீர்!**

இந்தச் சோதியுடன் சோதி 28 ஆண்டுச் சேவையை ஆரம்பித்து 7-8ம் இதழ் வெளிவருகிறது. இன்றைய நிலையில் கடுதாசித் தட்டுப்பாடும் விலை ஏற்றமும் யாவரும் அறிந்ததே. எம்மால் இயன்றளவு ஆத்மீக சேவை செய்வதே எமது குறிக்கோள். ஆகவே சந்தா நேயர்கள் தங்கள் சந்தாக்களை வெகு விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரியகாலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— **ஆத்மஜோதி நிலையம்**
அச்சிடுவோர்:— **ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.**
வெளியிட்ட திகதி:— **14-6-76.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org